**செ. கு. எண்: 154** **நாள் : 20.11.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.11.2015

திருநெல்வேலி மாவட்டம், நாராணம்மாள்புரம் குறு வட்டம், தச்சாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மந்திரம் பிள்ளை என்பவரின் மகன் கணேசன் 18.11.2015 அன்று அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில் அருகே மழையின் காரணமாக மின்கசிவு ஏற்பட்டதில் மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் பெய்து வரும் கன மழையின் காரணமாக மின்கசிவு ஏற்பட்டு உயிரிழந்த திரு. கணேசன் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. கணேசன் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நான்கு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**